**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | | |
|---|---|---|
| Calendar Case No: | | CC. 176/2022 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | | அ.சா. 2 |
| Name | : | **திருமதி. ஜெயமணி** |
| Father's Name/Husband Name: | | **திரு. குமார்** |
| Village | : | அயினார்பாளையம் |
| Taluk | : | வேப்பந்தட்டை |
| Age | : | 31/2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 07.10.2025

**(1969–ம் ஆண்டின் 54வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. B. ஆனந்தன் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**( எதிரிகள் 1, 2, 4 ஆஜர். எதிரி 3 ஆஜர் இல்லை. அவர்களுக்காக கு.வி.மு.ச.317 ன்படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)**

**முதல் விசாரணை**

1(i) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 யையும், அவரது மனைவி ராணியை தெரியும். எதிரிகள் அனைவரையும் தெரியும். சம்பவத்திற்கு முன்பாக அ.சா.1, அவரது மனைவி மற்றும் எதிரிகளுக்குமிடையே என்ன பிரச்சனை என்று எனக்கு தெரியாது. அ.சா.1ம் எதிரிகள் மீது எதற்காக புகார் கொடுத்துள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியாது. வழக்கு சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது. வழக்கு சம்பவத்தில் யார் யாருக்கு காயம், யார் யார் பாதிக்கப்பட்டார்கள் என்று எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது. அ.சா.1 கொடுத்த புகார் சம்மந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது**

**அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை**

தற்போது அ.சா.1ம் அவரது மனைவியும் எதிரிகளுடன் சமாதானம் ஆகிவிட்டனர். போலிசார் என்னை விசாரித்தபோது, கடந்த 16.01.2022 ம் தேதி மாலை 5 மணியளவில் அ.சா.1 அவரது வீட்டு முன்பாக இருந்த போது 1வது எதிரி தங்கதுரை குடிபோதையில் வந்து இரும்பு கம்பியுடன் அ.சா.1ன் மனைவியை தகாத வார்த்தைகளால் பேசி, அ.சா.1ன் மனைவியின் முதுகில் ஓங்கி அடித்தார் என்றும், அதனை தடுத்த அ.சா.1யை எதிரி தங்கதுரை தகாத வார்த்தைகளால் பேசி இரும்புக்கம்பியால் அ.சா.1ன் தலை மற்றும் தோள்பட்டையில் கடுமையாக தாக்கினார் என்றும், எதிரிகள் மணிகண்டன், பிரசாத் மற்றும் சிற்றம்பலம் ஆகியோர் தகாத வார்த்தைகளால் பேசி அ.சா.1ன் மனைவியின் சேலையை உருவி மானபங்கம் செய்து, கையாலும் இரும்புக்கம்பியாலும் கடுமையாக தாக்கினார்கள் என்றும், எதிரிகள் இரும்புக்கம்பி மற்றும் கொடுவாளை காட்டி கொலை மிரட்டல் விடுத்தனர் என்றும், அதனால் எதிரிகள் மீது அ.சா.1 புகார் மனு கொடுத்தார் என்றும் அதற்கு ஆதரவாக வாக்குமூலம் அளித்தேன் என்றால் சரியல்ல. தற்போது அ.சா.1 மற்றும் அவரது மனைவி எதிரிகளுடன் சமாதானம் ஆகிவிட்டபடியால் அவர்கள் கேட்டுக்கொண்டதன்பேரில் உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

இல்லை.

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-xxxxxxxxx
Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.